*கவனிக்க.-2019.10.25 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2148 - 2019 නොවැම්බර් මස 01 වැනි සිකුරාදා - 2019.11.01

*2148 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *2832* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *2842* |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2019, நவெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, நவெம்பர் மாதம் 08 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*2829-B 81574-5,403 (2019/11)*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலூம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.*

***3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :***

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலூம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலூவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

***4. பணிக்கமர்த்தும் நியதிகள் :***

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

***6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :***

*6.1 எல்லூத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலூம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலூவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.*

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.*

*அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.*

I. *விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;*
II. *விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;*
III. *இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;*
IV. *குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;*
V. *இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;*
VI. *குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;*
VII. *பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;*
VIII. *பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.*

*பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.*

1. *சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.*
2. *பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.*
3. *பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.*
4. *சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.*
5. *பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.*
6. *பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;*
7. *உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.*
8. *பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.*
9. *பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.*
10. *பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள்* (Electronic Communication Instruments/ Devices) *தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.*
11. *இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*
12. *பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.*
13. *எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.*
14. *பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.*
15. *பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.*
16. *பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.*
17. *பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:*
    (i) *சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;*
    (ii) *பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;*
    (iii) *பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.*
        (a) *ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.*
        (b) *சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.*
    (iv) *பரீட்சார்த்தி புளூடூத்* (Bluetooth) *போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை* (Electronic Communication Devices) *உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;*
    (v) *பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;*
    (vi) *பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;*
    (vii) *நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;*
    (viii) *விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;*
    (ix) *கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;*
    (x) *கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;*
    (xi) *ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழராத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;*
    (xii) *உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;*
    (xiii) *ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.*

*பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.*

*இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை.*

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### தமிழ் மொழி மூலம் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பதிவாளர் பதவி – களுத்துறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம் /மேலதிக விவாகப் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரர், 40 வயதுக்குக் குறையாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன், 62 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்குக் குறையாதவராக இருத்தல் வேண்டும். விதவைகள்/ தபுதாரர் அல்லது விவாகரத்தானவரா யிருத்தல் கூடாது.

5. விண்ணப்பம் கோரப்படும் விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய ஏனைய விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

6. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2019, திசெம்பர் மாதம் 02 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்குக் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2019, செத்தெம்பர் 30.

#### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| களுத்துறை | வலல்லாவிட்ட | மாகலந்தாவ பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் மேற்கு பஸ்துன் கோறளைப் பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை. |

11-105

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவி - நுவரெலியா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரர் 40 வயதிற்கு குறையாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன், 62 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் அதிகபட்ச வயது 65 வருடங்கள் ஆகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்கான விண்ணப்பதாரர் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாதவராக இருத்தல் வேண்டும். தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

5. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

6. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2019, திசெம்பர் மாதம் 02 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2019, ஒற்றோபர் 14.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| நுவரெலியா | நுவரெலியா | நுவரெலியா மாவட்டப் பிரிவின் தலவாக் கலை பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், நுவரெலியா. |

11-744

## பதிவாளர் நாயகத் திணைக்களம்

பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி – கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம் /மேலதிக விவாகப் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரர், 40 வயதிற்குக் குறையாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன், 62 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்குக் குறையாதவராக இருத்தல் வேண்டும். விதவைகள்/ தபுதாரர் அல்லது விவாகரத்தானவரா யிருத்தல் கூடாது.

5. விண்ணப்பம் கோரப்படும் விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய ஏனைய விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

6. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2019, திசெம்பர் மாதம் 02 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்குக் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2019, ஒற்றோபர் 14.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | பூஜாபிட்டிய | ஹாரிஸ்பற்று பிரிவின் மேலதிக விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி. |

11-745

## இலங்கை கடற்படை

### இலங்கை நிரந்தரக் கடற்படையின் கைவினை பகுதியில் கடற்படை வீரர்களுக்கான வெற்றிடங்கள்

1. இலங்கை நிரந்தர/தன்னார்வ கடற்படையின் கைவினைப் பகுதியில் (சிவில் பொறியியல்) கடற்படை வீரர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன.

2. **அடிப்படை நிபந்தனைகள்**

(அ) குடியுரிமை - இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) வயது - தேர்வு செய்யும் தினத்திற்கு 18 வயதிற்கும் 33 வயதிற்கும் இடையில் இருத்தல் வேண்டும்.

(இ) உயரம் - 5 அடி 5 அங்குலத்திற்கு (165 செ. மீ.) குறையாதிருத்தல் வேண்டும்.

(ஈ) மார்பு - 32 அங்குலத்துக்கு (81செ.மீ.) குறையாதிருத்தல் வேண்டும்

(ஊ) பார்வை வர்ணப்பதிவு மட்டம்- எஸ்டீடி II

(எ) தொலை பார்வை - இடது கண் 6/6மற்றும் வலது கண் 6/6(மூக்குக் கண்ணாடி மற்றும் கண்ணாடி வில்லை இன்றி)

(ஏ) குடியியல் அந்தஸ்து - விண்ணப்பதாரர்கள் திருமணமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். பயிலுநர் எவரும் பயிற்சியின் போது மற்றும் "பலநெவி" தரத்திற்கு தகுதி பெறும் வரையில் திருமணம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள். திருமண உற்சவம் கடற்படையின் சட்ட திட்டத்தின் கீழ் செய்துகொள்ள முடியம்.

**கல்வித் தகைமைகள்** : க.பொ.த (சா.த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது கணிதம், விஞ்ஞானம், ஆங்கில மொழி மற்றும் தாய் மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். கீழ்க் காணப்படும் தகைமைகளுக்கு தொழில்முறை தகுதி மற்றும் தொழில் அனுபவம் இருத்தல் வேண்டும். க.பொ.த. (உ.த.) பரீட்சையில் கணிதப் பாடப்பிரிவு/பொறியியல் தொழில்நுட்ப பாடப்பிரிவில் பயின்ற விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**அ. சிவில் பொறியியல் பிரிவு (III ஆம் வகுப்பு) பதவிக்கான தொழில்நுட்ப திறன் (வயது 18-33)**

(1) தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் (NCT) சிவில் பாடநெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்தல்.

அல்லது

(2) தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் (NCT) அளவு கணக்கெடுப்பு பாடநெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்தல்.

அல்லது

(3) தொழில்துறை தொழில்நுட்ப வல்லுநர்களுக்கான தேசிய சான்றிதழ் (NCIT) சிவில் பாடநெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்தல்.

அல்லது

(4) மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணையகத்தின் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து அல்லது அதே மட்டத்தில் உள்ள NVQV தொழில்நுட்ப சான்றிதழ்/டிப்ளோமா பாடநெறியினை வெற்றி கரமாக பூர்த்தி செய்தல்.

மற்றும்

(5) அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் தொடர்புடைய துறையில் 03 வருட அனுபவம் இருத்தல்.

**ஆ. சிவில் பொறியியல் பிரிவு (IV ஆம் வகுப்பு) பதவிக்கான தொழில்நுட்ப திறன்(வயது 18-30)**

(1) தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் (NCT) சிவில் பாடநெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்தல்.

அல்லது

(2) தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் (NCT) அளவு கணக்கெடுப்பு பாடநெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்தல்.

அல்லது

(3) தொழில்துறை தொழில்நுட்ப வல்லுநர்களுக்கான தேசிய சான்றிதழ் (NCIT) சிவில் பாடநெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்தல்.

அல்லது

(4) மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணையகத்தின் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து அல்லது அதே மட்டத்தில் உள்ள NVQ V தொழில்நுட்ப சான்றிதழ் / டிப்ளோமா பாடநெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்தல்.

மற்றும்

(5) அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் தொடர்புடைய துறையில் 01 வருட அனுபவம் இருத்தல்.

**இ. சிவில் பொறியியல் பிரிவு (I ஆம் தரம்) பதவிக்கான தொழில்நுட்ப திறன்(வயது 18-28)**

(1) தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் (NCT) சிவில் பாடநெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்தல்.

அல்லது

(2) தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் (NCT) அளவு கணக்கெடுப்பு பாடநெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்தல்.

அல்லது

(3) தொழில்துறை தொழில்நுட்ப வல்லுநர்களுக்கான தேசிய சான்றிதழ் (NCIT) சிவில் பாடநெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்தல்.

அல்லது

(4) மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணையகத்தின் (TVEC)அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து அல்லது அதே மட்டத்தில் உள்ள NVQ V தொழில்நுட்ப சான்றிதழ் / டிப்ளோமா பாடநெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்தல்.

அல்லது

(5) அரச தொழில்நுட்ப கல்லூரியில் 1 வருட முழுநேர திட்டமிடல் தேசிய சான்றிதழ் (NCED) பாடநெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்தல் அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணையகத்தின் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து அல்லது அதே மட்டத்தில் உள்ள NVQ IV தொழில்நுட்ப சான்றிதழ் பாடநெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்த பின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் தொடர்புடைய துறையில் 02 வருட அனுபவம் இருத்தல்.

**ஈ. சிவில் பொறியியல் பிரிவு (II ஆம் தரம்) பதவிக்கான தொழில்நுட்ப திறன்(வயது 18-26)**

(1) அரச தொழில்நுட்ப கல்லூரியில் 1 வருட முழுநேர திட்டமிடல் தேசிய சான்றிதழ் (NCED) பாடநெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்தல்.

அல்லது

(2) மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணையகத்தின் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து அல்லது அதே மட்டத்தில் உள்ள NVQ IV தொழில்நுட்ப சான்றிதழ் பாடநெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்தல்.

மற்றும்

(3) அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் தொடர்புடைய துறையில் 01 வருட அனுபவம் இருத்தல்.

**உ. சிவில் பொறியியல் பிரிவு (III ஆம் தரம்) பதவிக்கான தொழில்நுட்ப திறன்(வயது 18-24)**

(1) அரச தொழில்நுட்ப கல்லூரியில் 1 வருட முழுநேர திட்டமிடல் தேசிய சான்றிதழ் (NCED) பாடநெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்தல்.

அல்லது

(2) மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணையகத்தின் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து அல்லது அதே மட்டத்தில் உள்ள NVQ IV தொழில்நுட்ப சான்றிதழ் பாடநெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்தல்.

**ஊ. சிவில் பொறியியல் பயிலுநர்களுக்கு (IV ஆம் தரம்) பதவிக்கான தொழில்நுட்ப திறன் - தன்னார்வு (வயது 18-24)**

அரச தொழில்நுட்பக் கல்லூரியில் 01 வருடம் அல்லது அதற்கு மேற்பட்ட முழுநேர NVQ IV, NVQ V மட்டத்திலான மேற்குறிப்பிடப்பட்ட பாடநெறியினை பூர்த்தி செய்தல் / 2019, திசெம்பர் மாதம் இடம்பெறவுள்ள இறுதித் தேர்வுக்கு பங்குபெற இருந்தால் (பாடநெறியினை பூர்த்தி செய்து அதன் தேர்வு முடிவுகள் வரும்வரை காத்திருக்கும்/ 2019, திசெம்பர் மாதம் இடம்பெறும் இறுதித் தேர்வுக்கு பங்குபெற இருப்பதாக தொழில்நுட்ப கல்லூரியின் அதிபரினால் உறுதிப்படுத்த வேண்டும்) ஆட்சேர்ப்பு செய்த திகதியில் இருந்து 06 மாதம் தொழில் பயிற்சியினை (OJT) வழங்குவதுடன் பாடநெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்த திகதியில் இருந்து 05 வருட ஆரம்ப சேவை ஒப்பந்தத்தின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

3. மேலே குறிப்பிடப்பட்ட உடல் மற்றும் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவுடன் உயரம், பார்வை மற்றும் நிறை மட்டம் என்பன பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் வேண்டப்பட்ட அளவுகளுக்கேற்ப உயரம், பார்வை மற்றும் நிறை ஆகியவற்றைக் கொண்டிராத விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள். எவரேனும் ஒரு விண்ணப்பதாரியின் உயரம் உரிய அளவில் இல்லாதிருந்தும் இராணுவ சேவைக்கு பயனுள்ள விசேட திறன்கள் இருந்தால் கடற்படைத் தளபதியின் அனுமதியுடன் அவர் தொடர்பாக கவனத்தில் கொள்ளப்படும்.

**4. சேவை நிபந்தனைகள் :**

(அ) விண்ணப்பதாரிகள் பயிலுநர்களாக ஆட்சேர்ப்பு செய்யப்படுவதுடன் அவர்கள் அடிப்படைப் பயிற்சி நெறிகளையும் கற்றல் வேண்டும்.

(ஆ) பாதுகாப்பு அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய கடற்படைத் தளபதியின் தீர்மானத்தின்படி இலங்கையில் எந்தப் பகுதியிலும் அல்லது வெளிநாட்டு பயிற்சிக்காக பயிலுநர்கள் தயாராக இருத்தல் வேண்டும்.

(இ) பயிற்சி பெறும் காலப்பகுதியிலும் மற்றும் ஓய்வு பெற்ற பின்னரும் கடற்படை வீரர்கள் கடற்படைச் சட்டத்திற்கு கட்டுப்படுதல் வேண்டும்.

(ஈ) அனைத்து பயிலுநர்களுக்கும் சகல சின்னங்களுடனான சீருடை உபகரணங்கள் மற்றும் வைத்திய சேவை என்பன வழங்கப்படும்.

(உ) பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் காலப்பகுதியில் பயிலுநர்களுக்கு வதிவிட வசதிகள் மற்றும் உணவு கடற்படையிடமிருந்து வழங்கப்படும்.

(ஊ) பயிற்சிபெறும் கால எல்லையினுள் எவரேனும் ஒரு பயிலுநர் தமது சேவையில் இருந்து சுயவிருப்பில் இடைநிறுத்துவதற்கு தேவைப்பட்டால் அதற்காக இலங்கைக் கடற்படை சட்டதிட்டதிற்கு அமைய எழுத்துபூர்வ அனுமதியினை பெற வேண்டியதுடன், இலங்கை குடியரசு மூலம் பயிலுநருக்காக அதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள அனைத்து செலவினங்களையும் குறித்த பயிலுநரினால் இலங்கை குடியரசுக்கு மீள செலுத்துதல் வேண்டும்.

(எ) பயிற்சி பெறுகின்ற கால எல்லையினுள் ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் எவரேனும் ஒரு பயிலுநரின் துர்நடத்தை மீது அல்லது அவர் பொறுப்புக்கூற வேண்டிய ஏதேனுமொரு காரணத்தின் மீது அவர் கடற்படைச் சேவைக்கு தகுதி அற்றவர் என பொறுப்பானவர் ஒருவரினால் தீர்மானிக்கப்பட்டால் அச்சந்தர்ப்பத்திலேயே சம்பந்தப்பட்ட பயிலுநரினால் அவர் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட அனைத்து செலவினங்களையும் இலங்கைக் கடற்படைக்கு மீளச் செலுத்துவதற்கு இணங்குவதாக இலங்கை குடியரசு சார்பாக கடற்படைத் தளபதியுடன் பிணையொன்றுக்கு உட்படுதல் வேண்டும்.

(ஏ) உடற் தகுதி சோதனையில் தகுதி பெற்ற விண்ணப்பதாரிகள் மட்டும் அன்றைய தினமே அடிப்படை நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவதுடன் விண்ணப்பதாரிகள் எழுத்து மூல மற்றும் வாய் மொழிப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். பரீட்சையில் பெறப்பட்ட புள்ளி மற்றும் தற்போதுள்ள வெற்றிடங்களுக்கு அமைய அதிக புள்ளிகள் பெற்ற விண்ணப்பதாரிகள் ஆட்சேர்புக்காக அழைக்கப்படுவர்.

(ஐ) அனைத்து கடற்படை வீரர்களும் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக எந்தசந்தர்ப்பத்திலும் உலகத்தில் எந்தவொரு பிரதேசத்திற்கும் செல்லும் நியதிக்கு உள்ளாவர்.

(ஒ) அனைத்து கடற்படை வீரர்களும் கடற்படை சட்டத்திற்கு கட்டுப்படுத்தபடுவார்கள்.

5. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள்.**- தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச்சட்டத்தின் மொழிக் கொள்கையினை செயற்படுத்தும் பொருட்டு இதன்பின்னர் விதிக்கப்படும் கட்டளைகள் மற்றும் சட்ட விதிகளை பின்பற்றுதல் வேண்டும்.

6. **சம்பளமும் கொடுப்பனவுகளும்**.- 2019.01.01 ஆம் திகதியிலிருந்து 03/2016ஆம் இலக்க முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கையின் பிரகாரம் சம்பளக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும். இதற்கமைய -

| | | |
|---|---|---|
| (அ) | அடிப்படைச் சம்பளம் | - ரூபா 26,488.00 |
| (ஆ) | வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு | - ரூபா 7,800.00 |
| (இ) | சீருடை பேணுதல் கொடுப்பனவு | - ரூபா 350.00 |
| (ஈ) | கஷ்ட கொடுப்பனவுகள் (யுத்தப் பிரதேசங்களில்) | - ஆரம்ப பயிற்சியின் பின் |
| (உ) | கஷ்ட கொடுப்பனவுகள் (யுத்தமற்ற பிரதேசங்களில்) | - அடிப்படைப் பயிற்சியின் பின் |
| (ஊ) | ஏனைய கொடுப்பனவுகள் | - விசேட கொடுப்பனவு ரூபா 1,000.00 |
| | | - விசேட மேலதிகக் கொடுப்பனவு ரூபா 2,400.00 |
| (எ) | தனிப்பயன் கொடுப்பனவு | - ரூபா 684.00க்கு |
| (ஏ) | குறைந்தபட்ச மொத்த சம்பளம் | - ரூபா 38,722.00 |

**குறிப்பு** : கடற்படை வீரர்களின் அடிப்படைச் சம்பளம் 2020.01.01 ஆந் திகதிக்கு ரூபா 29,540.00 என்பதோடு பின்வருமாறு சம்பள உயர்வுகள் வழங்கப்படும்.

2016.01.01 - 176×5-210×19
2020.01.01 - 300×5-370×19

(ஐ) இலவசமாக புகையிரதத்தில் பிரயாணம் செய்யக்கூடிய மூன்று சோடி புகையிரத ஆணைச்சீட்டு ஆண்டொன்றுக்கு (கடற்படை வீரருக்கும், துணைவிக்கும், பிள்ளைகளுக்கும், சார்ந்திருப்பவர்களுக்கும்)உரித்தாகும்.

(ஒ) முகாமில் வசிக்கும் கடற்படை வீரர்களுக்கு மாதமொரு தடவை அலுவலர் விடுதியிலிருந்து சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரத ஆணைச்சீட்டு அல்லது பஸ் கட்டண செலவினம் செலுத்தப்படும்.

(ஓ) சீருடை மற்றும் உபகரணங்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்படும்.

(ஔ) இலவச மருத்துவ வசதிகள் வழங்கப்படும். (கடற்படை வீரருக்கும், துணைவிக்கும், பிள்ளைகளுக்கும், சார்ந்திருப்பவர்களுக்கும்)

(க) அரசாங்க குடிமனைகளில் வசிக்காத திருமணமான கடற்படை வீரர்களுக்கு மாதாந்தம் ரூபா 2,400.00 தொடக்கம் ரூபா 6,600.00 வரையிலான வீட்டு வாடகைக் கொடுப்பனவுக்கு உரித்துடையவராவர்.

(கா) திருமணமான கடற்படை வீரர்களுக்காக விவாகமானவர்களின் விடுதிகளில் வெற்றிடங்களின் அடிப்படையில் விடுதிகள் வழங்கப்படும். இதற்காக அரசாங்க சேவையினருக்கு உரியவாறு வீட்டு வாடகை அறவிடப்படும்.

7. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்** :

(அ) இலங்கை நிரந்தர/ தன்னார்வ கடற்படை சேவைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் வாரத்தின் ஒவ்வொரு தினமும் (போயா மற்றும் அரசாங்க விசேட விடுமுறை தினம் தவிர) இலங்கைக் கடற்படை முகாம் வெலிசர (மஹசென்) என்ற முகவரிக்கு சமுகமளிக்க வேண்டும்.

இது தொடர்பான மேலதிக தகவல்களை www.navy.lk இணையத்தளத்தின் ஊடாக அல்லது 0117195162 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

(ஆ) நேர்முகப் பரீட்சைக்கு அல்லது ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் அழைக்கப்பட்டால் விண்ணப்பதாரர்கள் பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்:-

(1) பிறப்புப் சான்றிதழ் ;
(2) விண்ணப்பித்திருக்கும் பிரிவுகளுடன் தொடர்பான கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் கல்விச் சான்றிதழ்;
(3) பாடசாலை விடுகைச் சான்றிதழ்;
(4) 6 மாதத்திற்குள் பெறப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழ்;
(5) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட தொழில்சார்/ தொழில்நுட்ப அல்லது அனுபவமிருப்பின் அது தொடர்பான சான்றிதழ்;
(6) சமீபத்தில் பெறப்பட்ட மூன்று நற்சான்றுப்பத்திரங்கள், அதில் ஒன்று விண்ணப்பதாரர் இறுதியாக தாம் கல்வி கற்ற பாடசாலை அதிபரிடம் இருந்து;
(7) விளையாட்டு மற்றும் ஏனைய செயற்பாடுகள் தொடர்பான சான்றிதழ்கள்.

(இ) உரிய சந்தர்ப்பங்களில் ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறுகின்ற விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுக்கப்படமாட்டாது.

8. விண்ணப்பத்தில் பொய்யான தகவல்களை வழங்குதல், குறித்த பொய்யான தகவல்கள் தொடர்பாக விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படுவதற்கு முன் தெரியவருமிடத்து அவரின் பயிலுநர் தன்மையை இரத்துச் செய்வதற்கும், தெரிவு செய்யப்பட்டதன் பின் கண்டுபிடிக்கப்படின், அவர் தண்டனை உட்பட சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

9. **தேர்ந்தெடுத்தல், நேர்முகப்பரீட்சை முதலியன** :

(அ) மேற்கூறப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்களுக்காக இலங்கைக் கடற்படையினரால் நடாத்தப்படுகின்ற ஆரம்ப மருத்துவ சோதனையில் தேர்ச்சியடைதல் வேண்டும். அச்சோதனையில் தேர்ச்சியடைந்த விண்ணப்பதாரர்கள் மாத்திரம் கீழ் குறிப்பிட்டுள்ள உடல் உறுதித் தேர்வில் தேர்ச்சியடைதல் வேண்டும். உடல் உறுதித் தேர்வில் தேர்ச்சியடைந்த விண்ணப்பதாரர்களுக்கு தெரிவுச் சபை ஒன்றின் முன் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும்.

(ஆ) உடல் உறுதித் தேர்வு தேர்ச்சியடைவதற்கான தேவைப்பாடுகள்

| உடற்பயிற்சி | காலம் (நிமிடம்/செக்கன்) | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|---|
| 1600 மீற்றர் ஓட்டம் | - | 07 நிமிடம் 30 வினாடி | 09 நிமிடம் 30 வினாடி |
| Sit up | 01 நிமிடம் | 15 தடவைகள் அல்லது அதற்கு மேலதிகமாக | 08 தடவைகள் அல்லது அதற்கு மேலதிகமாக |
| Push up | 01 நிமிடம் | 20 தடவைகள் அல்லது அதற்கு மேலதிகமாக | 10 தடவைகள் அல்லது அதற்கு மேலதிகமாக |
| Pull up | 01 நிமிடம் | 07 தடவைகள் அல்லது அதற்கு மேலதிகமாக | 03 தடவைகள் அல்லது அதற்கு மேலதிகமாக |

(இ) நேர்முகப் பரீட்சைகளுக்குத் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைக்கான இடம், நேரம், திகதி என்பன விண்ணப்பதாரர்களால் வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்து மூலம் தபாலில் அறிவிக்கப்படும். நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக பிரயாண செலவுகள் அல்லது வேறு எவ்வித செலவுகளும் செலுத்தப்படமாட்டாது.

(ஈ) இப்பதவிக்காக விண்ணப்பதாரர் அழைக்கப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும்.

(உ) இறுதி நேர்முகப் பரீட்சைக்குப்பின் தகுதியானவர்களான விண்ணப்பதாரிகள் கடற்படை மருத்துவச் சபைக்கு சமுகமளித்தல் வேண்டும்.

(ஊ) விண்ணப்பதாரர் ஒருவரை சிபாரிசு செய்வதற்கு எண்ணுகின்ற எவராயினும் அவ்வாறு சிபாரிசு செய்வது அவருக்கு சான்றிதழ் ஒன்றை வழங்குவதன் மூலமேயாகும். விண்ணப்பதாரர் ஒருவரை தெரிவு செய்வதற்கு எவ்விதத்திலேனும் உந்துதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் விண்ணப்பதாரரை தகுதியிழக்கச் செய்யும்.

(எ) ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகுதியற்ற விண்ணப்பதாரிகளுக்கு அது விடயமாக அறிவிக்கப் படமாட்டாது.

**குறிப்பு**: இவ்வர்த்தமானி அறிவித்தல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுவதுடன் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையில் ஒவ்வாமை காணப்படின்அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழியிலான உரையே வலுவுடையதாக இருத்தல் வேண்டும்.

கே.கே.வி.பி.எச். த சில்வா,
டப்டப்வீ*, ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ,
வீஎஸ்வீ, யூஎஸ்பீ, என்டியு,
வயிஸ் அத்மிரால்,
கடற்படைத் தளபதி.

கடற்படைத் தலைமையகம்,
த. பெ. 593,
கொழும்பு 01.

**APPLICATION FOR POST OF RECRUIT ARTIFICER (CIVIL ENGINEERING) IN THE SRI LANKA NAVY**

01. Nationality: ____________________.
(State whether citizen of Sri Lanka by descent or by registration and if registration quote number and date of certificate)
02 . Stream applied (in priority order) : ________________.
03. Full Name (As per the National Identity Card):________________.
04. National Identity Card Number: ______________.
05. Permanent Address: ______________.
06. Postal Address: ______________.
07. Date of Birth: ______________.
08. Age Years: _____, Months:________, Days :_________. (As at 30 th November 2019):
09. Height: _____ (cm), Chest.: _____ (cm), Weight: _____ (Kg).
10. Nearest Police Station to permanent address: _____.
11. District: _______________.
12. Electorate: _______________.
13. GS Division: _______________.
14. Telephone Number: _______________.
15. Civil Status:_______________.
16. Gender: _______________.
17. SchoolsAttended: _______________.
18. Particulars of School or university attended:

| *Name of school/ University* | *Type of Examination* | *Year of Examination* | *Subject passed (Including grading)* |
|---|---|---|---|
| | Ordinary Level :<br>Advanced Level :<br>Other | | |

19. Particulars of employment since leaving School/University: - (if applicable)

| *Name and address of employer* | *Nature of employment* | *Period of service* | |
|---|---|---|---|
| | | *From* | *To* |
| | | | |

20. Particulars of parents:-

| *Full Name* | *Place of birth* | *Occupation* | *Present Address* |
|---|---|---|---|
| Father<br>Mother | | | |

21. Any special qualification for the post:________________.
22. Details of current achievements in sports (Give details of teams and competitions participated in with dates/years etc. and standards / levels achieved):________________.
23. Other achievements of note at School / University or at outside organizations (Give details with dates / years etc.) :________________.

24. Any previous service in the Armed Force or Volunteer Force, Cadet Corps or Boy Scout Organization: ______________.

25. Have you applied earlier to join the Sri Lanka Navy or any of the Armed Services or Police, if so give details and the outcome of such applications: ________________.

26. Have you being convicted or bound over by a civil or military court, if so give details :________________.

27. If employed earlier in a Government Department or in the Public Sector / Board / Corporation (including the Central Bank, National Bank, Universities, Joint Stock Companies controlled by the Government etc.) reasons for termination of employment: ________________.

28. Particulars of testimonials:-

| *Name* | *Designation* | *Postal Address* |
|---|---|---|
| | | |

29. Declaration to be signed by the applicant:-

I declare on my honor that answers given to the above questions are true and correct to the best of my knowledge and belief. I have read and understood the procedure which will be adopted and the rules which will apply in respect of those candidates who are selected for the Artificer branch in the Sri Lanka Navy published in the Gazette of the Government of Sri Lanka.

Date:——————

——————,
Signature of applicant.

*11-829*

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

இஸ்லாமிய சன்மார்க்க அஹதிய்யா, அல்குர்ஆன் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை - 2017 (2020)

(பௌத்த தஹம் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்குச் சமாந்தரமானது)

1. **ஒழுங்கு விதிகளும் பிரமாணங்களும்**.- மேற்படி பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2020, சனவரி மாதத்தில் நடாத்தப்படும். பரீட்சைக்கான பாடங்களும், பாடத்திட்டங்களும், இணைப்பு 01 இல் தரப்பட்டுள்ளன.

2. **பரீட்சை நிலையங்கள்**.- இணைப்பு 02 இல் கூறப்பட்டுள்ள நகரங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் தோற்றும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும்.

ஆயினும் ஏதாவதொரு நகரப் பரீட்சை நிலையத்திற்குப் போதிய விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காத போது குறித்த பரீட்சை நிலையம் இரத்துச் செய்யப்பட்டு அந்த நிலையத்திற்குரிய விண்ணப்பதாரிகள் அண்மையிலுள்ள வேறொரு நகரப் பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றச் செய்யப்படுவர்.

3. **ஊடக மொழி**.- இப்பரீட்சை தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடாத்தப்படும். எனினும் ஒரு பரீட்சார்த்தி, தான் தோற்றும் சகல பாடங்களுக்கும் இவற்றுள் யாதேனும் ஒரு மொழி மூலத்தில் மட்டுமே தோற்ற முடியும்.

4. **தகைமைகள்**.- இப்பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இதன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளில் ஏதேனுமொன்றைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

4.1 முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில், பதிவு செய்யப்பட்ட அஹதிய்யாப் பாடசாலையொன்றில் 10 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களாயிருத்தல்.
அல்லது

4.2 முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில், அங்கீகரிக்கப்பட்ட சிரேஷ்ட தர அல்குர்ஆன் மத்ரஸா பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்த மாணவராயிருத்தல்.
அல்லது

4.3 இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இஸ்லாம் அல்லது அரபு பாடத்தில் சித்தியடைந்தவர்களாகவிருத்தல்.

**குறிப்பு**.-

1. இப்பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும், மேலே 4 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றுள்ளாரென அஹதிய்யாப் பாடசாலையின் அதிபர் அல்லது சிரேஷ்ட அல்குர்ஆன் மத்ரஸா அதிபர் அல்லது பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

2. பரீட்சார்த்தி ஒருவர் இப்பரீட்சைக்குப் பதிவு செய்யப்பட்ட அஹதிய்யாப் பாடசாலை அல்லது சிரேஷ்ட அல்குர்ஆன் மத்ரஸா அல்லது பாடசாலை அதிபர் மூலமே விண்ணப்பிக்க முடியும்.

5. பதிவு செய்யப்பட்ட சகல அஹதிய்யாப் பாடசாலைகள், சிரேஷ்ட குர்ஆன் மத்ரஸாக்கள், மத்ரஸா பாடசாலைகள் என்பவற்றிற்கு விண்ணப்பப்பத்திரங்களும், அறிவுறுத்தல்களும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பப் பத்திரங்களும், அறிவுறுத்தல்களும் கிடைக்கப் பெறாத நிறுவனங்கள், "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு 2019, நவெம்பர் மாதம் 22 ஆந் திகதிக்கு முன் விண்ணப்பப்படிவங்களை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

5.1 விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியினைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்புவதோடு, மற்றைய பிரதியினைக் குறிப்பிட்ட நிறுவனத்தில் கோவைப் படுத்தி வைத்திருத்தல் வேண்டும்.

5.2 விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2019, திசெம்பர் மாதம் 02 ஆந் திகதி ஆகும்.

5.3 விண்ணப்பப்படிவங்கள் தெளிவாகவும், பிழைகளின்றியும் பூரணப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறு பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்களும், இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும்.

5.4 பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

5.5 விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

5.6 விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இஸ்லாமிய சன்மார்க்க அஹதியா இறுதிச் சான்றிதழ் பரீட்சை 2017 (2020)" எனவும், பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் நகரமும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

5.7 விண்ணப்பங்களோடு எவ்வித சான்றிதழையும் இணைத்து அனுப்பக்கூடாது. அஹதிய்யாப் பாடசாலையின் அல்லது சிரேஷ்ட குர்ஆன் மத்ரஸாவின் அதிபர் அல்லது பாடசாலை அதிபர் விண்ணப்பதாரி குறித்த தகைமையைப் பெற்றுள்ளார் என்பதை உறுதிப்படுத்தி இருத்தல் வேண்டும்.

6. **பரீட்சை கட்டணம் செலுத்தும் முறை**.-

6.1 இப்பரீட்சை முதற்தடவை தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது. அதன் பின்னர் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு கட்டணம் ரூபா 200.00 ஆகும். நூன சித்தியை பூரணப்படுத்துவதற்காக பாடத்திற்கு பரீட்சைக் கட்டணமாக ரூபா 50.00 செலுத்துதல் வேண்டும்.

6.2 பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டிய பரீட்சார்த்திகளுக்கான முழு தொகையை இலங்கையின் எந்தவொரு அஞ்சலகத்திலும் செலுத்தி பெறப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றினை வைத்திருத்தல் பயனுடையது.)

7. **அனுமதி அட்டைகள்**.- பரீட்சை அனுமதி அட்டைகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் உரிய அஹதிய்யா பாடசாலை அதிபர் அல்லது மத்ரஸா அதிபர் அல்லது பாடசாலை அதிபருக்கு விநியோகிக்கப்படும். அதிபரினால் அவ்வனுமதி அட்டைகள் உரிய பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

7.1 ஏதாவதொரு பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் ஆரம்ப தினத்திலேயே பரீட்சை அனுமதி அட்டையை பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்கத் தவறும் பட்சத்தில் அல்லது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்திலல்லாது வேறொரு பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்ற எத்தனிக்கும் பட்சத்தில் உரிய பரீட்சார்த்தியின் பரீட்சார்த்தித் தகவு இரத்துச் செய்யப்படும்.

7.2 அனுமதி அட்டையிலுள்ள விண்ணப்பதாரியின் கையொப்பம் அஹதிய்யாப் பாடசாலை அதிபர், குர்ஆன் மத்ரஸா அதிபர், பாடசாலை அதிபர், அரபுக் கல்லூரி அதிபர், அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையின் நிரந்தர பதவிநிலை உத்தியோகத்தர், மஸ்ஜிதுக்குப் பொறுப்பான இமாம் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

7.3 பரீட்சை நடைபெறுவதற்கு (07) ஏழு தினங்களுக்கு முன்னர் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்தில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த, அஹதிய்யாப் பாடசாலை, குர்ஆன் மத்ரஸா, பாடசாலை என்பவற்றின் அதிபர்கள் இது தொடர்பாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்க வேண்டும். அத்தகைய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கீழ்வரும் விடயங்கள் தெரிவிக்கப்படுதல் வேண்டும் :-

(அ) பரீட்சையின் பெயர் ;
(ஆ) அஹதிய்யாப் பாடசாலை/ குர்ஆன் மத்ரஸா/ அரசாங்கப் பாடசாலையின் பெயரும் கணினி இலக்கமும் ;
(இ) பரீட்சார்த்தியின் முழுப் பெயரும் விலாசமும் ;
(ஈ) பரீட்சைக்கு விண்ணப்பித்த நகரம் ;
(உ) விண்ணப்பத்தை சமர்ப்பித்த தபால் நிலையம் ;
(ஊ) பதிவு செய்த இலக்கமும் திகதியும்.

8. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்**.- சகல பரீட்சார்த்திகளும் தாம் பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் ஏற்றுக் கொள்ளத்தக்கவாறு தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்கென கீழ்க் குறிப்பிடப்பட்ட அடையாள அட்டைகளில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

8.1 தேசிய ஆளடையாள அட்டை;
8.2 செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு;
8.3 அஞ்சல் அடையாள அட்டை.

9. பரீட்சை முடிவுகளை வெளியிடலும், சித்திபெற்றமையைத் தீர்மானித்தலும்.

9.1 இப்பரீட்சைக்குரிய பாடங்கள் நான்கு ஆகும். குறித்த நான்கு பாடங்களிலும் சித்தியடையும் பரீட்சார்த்திகள் மட்டும் இப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களாகக் கருதப்படுவர்.

9.2 ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்று ஒரு பாடத்தில் மட்டும் சித்தி பெறத்தவறுவோர் நூன சித்தி பெற்றவராகக் கருதப்படுவார். அவர்கள் அடுத்து வரும் இரண்டு பரீட்சைத் தவணைகளுக்குள் நூன சித்திப் பாடத்திற்கு மாத்திரம் தோற்றி சித்தி பெற்றால், பரீட்சையில் சித்தி பெற்றோராகக் கணிக்கப்படுவர். (இது 2011 ஆம் ஆண்டுக்குரிய பரீட்சை முதல் நடைமுறைப்படுத்தப்படும்.)

9.3 ஒவ்வொரு பாடத்திற்கு 100 புள்ளிகள் வீதம் வழங்கப்படும். ஒவ்வொரு பாடத்திற்கும் பெறப்படும் புள்ளிகள் கீழ்க் குறிப்பிட்டவாறு தரப்படுத்தப்படும்.

| புள்ளி மட்டம் | தரம் | குறியீடு |
|---|---|---|
| 0 - 34 | சித்தியின்மை | F |
| 35 - 54 | சாதாரண சித்தி | S |
| 55 - 69 | திறமை சித்தி | C |
| 70 - 100 | விசேட சித்தி | D |

9.4 **பரீட்சை முடிவுகளை வெளியிடல்**.- பரீட்சை முடிவுகளைப் பற்றிய விபரங்கள் உரிய நிறுவனங்களது அதிபர்களுக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

*10.* **சான்றிதழ்**.- பரீட்சையில் சித்திபெறும் சகல பரீட்சார்த் திகளுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

*11.* **விடைத்தாள் மீள்பரிசீலனை**.- பரீட்சை முடிவுகள் வெளியாகி 30 நாட்களுக்குள் இத்திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் படிவங்கள் மூலம் குறிப்பிட்ட நிறுவ னத்தின் அதிபர் விண்ணப்பஞ் செய்தால் விடைத்தாள்களை மீள் பரிசீலனை செய்வதற்கான வாய்ப்பு வழங்கப்படும். எனினும், இதற்கு உரிய கட்டணம் செலுத்தப்படல் வேண்டும். பரீட்சை முடிவுகளில் மாற்றம் ஏற்படும் பட்சத்தில் மாத்திரமே கட்டணம் மீளளிக்கப்படும். எக்காரணம் கொண்டும் விண்ணப்பதாரிக்கோ அல்லது அவரது பிரதிநிதிக்கோ விடைப்பத்திரங்களைப் பார்வையிடுவதற்கோ இடமளிக்கப்படமாட்டாது.

*12.* இங்கு குறிப்பிடப்படும் நிபந்தனைகள், அறிவுறுத்தல் களுக்கமைய நடந்துகொள்வதற்குஎல்லா விண்ணப்பதாரிகளும் கட்டுப்பட்டுள்ளதோடு, இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்களிருப்பின் அவை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிவுக்கேற்பத் தீர்மானிக்கப்படும்.

பீ. சனத் பூஜித,
பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

ஒழுங்கமைப்பு, வெளிநாட்டு பரீட்சைகள் கிளை,
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.
2019, ஒற்றோபர் 23.

*இணைப்பு - 1*

**பரீட்சைக்கான பாடங்களும், பாடத்திட்டமும்**

இப்பரீட்சை ஒவ்வொரு வினாத்தாள்களும் மூன்று மணித்தியாலங்களைக் கொண்ட நான்கு வினாப்பத்திரங் களையுடையதாகும். வினாப்பத்திரங்களின் கட்டமைப்பும், வினாக்களுக்கான புள்ளி ஒதுக்கீடும் 2004.09.10 ஆந் திகதி 1358 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கேற்றவாறு அமைந்திருக்கும்.

முதலாம் வினாப்பத்திரம்

*1.* **அகீதாவும், ஷரீஆவும் (இஸ்லாமிய கோட்பாடும் மூலாதாரங்களும் அரபு மொழியும்)**

*1.1* அகீதா பொது விளக்கம் (அல் இலாஹிய்யாத், அந்நுபுவ்வத், அர்ரூஹானிய்யாத், அஸ்ஸம்இய்யாத்)

*1.2* **அகீதாவின் பிரிவுகள்**
* அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தின் அகீதா
* ஏனைய அகீதாப் பிரிவுகளிற் சில ஜபரிய்யா, கதரிய்யா, முர்ஜியா, முஃதஜிலா, ஷீஆ

*1.3* **தௌஹீதும், ஷிர்க்கும்**
* ஈமானும், குப்றும்
* ரித்தத், நிபாக்
* அல்குர்ஆன் அருளப்பட்டு தொகுக்கப்பட்ட வரலாறு
* சட்ட மூலாதாரம் என்ற வகையில் அல்குர்ஆனின் பயன்பாடு
* ஸுன்னாவின் தோற்றமும் தொகுக்கப்பட்ட வரலாறும்
* சட்ட மூலதாரம் என்ற வகையில் ஸுன்னாவின் பயன்பாடு
* ஹதீஸ் கலை வரலாறும் பிரதான முஹத்திஸ் களின் பங்களிப்புகளும்
* இஜ்திஹாத் பற்றிய விளக்கம்
* துணை மூலாதாரம் என்ற வகையில் இஜ்மா
* துணை மூலாதாரம் என்ற வகையில் கியாஸ்
* பிக்ஹுடைய வரலாறும் பிரதான இமாம்களும்

*1.4* **அறபு மொழி**
* உறுப்பமைய எழுதுதல்
* சிறு வாக்கியங்களை எழுதுதல்
* இஸ்லாம் பாடத்துடன் தொடர்புடைய அறபுச் சொற்களை எழுதுதல்
* முக்கியமான ஸூறாக்களையும், ஆயத்துக்க ளையும் ஹதீஸ்களையும் பிழையின்றி எழுதுதல்.

இரண்டாம் வினாப்பத்திரம்

*2.* **அல் பிக்ஹுல் இஸ்லாமி (இஸ்லாமிய சட்டநெறி)**

*2.1* இபாதத் பற்றிய விளக்கம்
* இபாதத்தின் பிரிவுகள்
* தஹாரத்

*2.2* நஜீஸும் அதன் வகைகளும்
* நஜீஸை சுத்தப்படுத்தும் முறை
* நீரும் அதன் வகைகளும்
* வுழு, தயம்மும், குளிப்பு பற்றிய நடைமுறை ஒழுங்குகள்

*2.3* ஸகாத்
* முக்கியத்துவம்
* விதி முறைகள்
* திரட்டலும் விநியோகமும்
* ஸகாத் மூலம் வறுமைத்தணிப்பும், செல்வப் பங்கீடும்

*2.4* நோன்பு
* முக்கியத்துவம்
* விதிமுறைகளும் பயனும்

*2.5* ஹஜ்
* முக்கியத்துவம்
* விதிமுறைகளும் பயனும்

2.6 ஹஜ்: நிறைவேற்றும் முறை
- * பர்ளுகள், வாஜிபுகள், சுன்னத்துகள்
- * பர்ளான ஹஜ்ஜுக்கு மேலதிகமாக செய்யும் ஹஜ்கள்

2.7 இஸ்லாத்தில் உணவு, உடை, உறையுள் பற்றிய கண்ணோட்டமும் நடைமுறைகளும்

2.8 ஜிஹாத் பற்றிய விளக்கம்

2.9 குர்பானிகளும் அறுப்பு முறைகளும்

2.10 சத்தியம் செய்தலும் நேர்ச்சையும்

2.11 முஆமலாத் பற்றிய விளக்கம்
- * உழைப்பின் முக்கியத்துவம்
- * பிரதான கொடுக்கல் வாங்கல் (வியாபாரம்) ஏனைய கொடுக்கல் வாங்கல் (உ+ம்: இரவல், வாடகை)
- * வக்பு, வஸிய்யத், வராஸத் (பொதுச்சொத்து, உயில் சொத்து, வாரிசுச்சொத்து)

2.12 இஸ்லாத்தில் ஆண், பெண் நிலை
- * நிகாஹின் விதிமுறைகளும் பயனும்
- * குடும்ப வாழ்வு
- * கணவன்-மனைவி
- * பெற்றோர் - பிள்ளை உரிமைகளும், கடமைகளும்
- * தலாக்கும் இத்தாவும்

2.13 ஜினாயத்
- * ஹுதூத், கிஸாஸ், தஃஸீர்

மூன்றாவது வினாப்பத்திரம்

**3. ஸீறாவும் தாரீகும்**

3.1 இஸ்லாத்துக்கு முந்திய அரபு நாட்டின் சமய சமூக நிலை

3.1.1 நபி (ஸல்) அவர்கள்

- ● நுபுவத்திற்கு முந்திய வாழ்க்கை
  - * குடும்பம், பரம்பரை
  - * இளமைப்பருவம்
  - * நற்குணம்
  - * திருமணம்

- ● நுபுவ்வத்துக்கும் ஹிஜ்ரத்திற்கும் இடையிலான வாழ்க்கை
  - * நுபுவ்வத் கிடைத்தல்
  - * இஸ்லாமிய பிரச்சாரங்களும் விளைவுகளும்
  - * மிஃராஜ்
  - * ஹிஜ்ரத்

- ● மதீனா வாழ்க்கை
  - * சமூக அரசியல் செயற்பாடு
  - * தற்காப்பு யுத்தங்களும், சமாதான உடன்படிக்கைகளும்
  - * இஸ்லாம் பூரணத்துவம் பெறல்.

- ● ஸஹாபாக்களின் அந்தஸ்தும் இஸ்லாத்திற்கான அவர்களது பங்களிப்பும்
- ● குலபாஉர்ராஷிதூன்கள் வரலாறும், அரசியல் பங்களிப்பும்
- ● உமையா, அப்பாசிய ஆட்சிக்காலம்
- ● பைத்துல் முகத்தஸ் - வரலாறு
- ● இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் பங்களிப்பும்
- ● முஸ்லிம்களின் அறிவியல் பங்களிப்பு
- ● பின்வருவோர் பற்றிய வரலாறு
- ●
  - * இமாம் புகாரி (றஹ்)
  - * இமாம் ஷாபிஈ (றஹ்)
  - * இமாம் கஸ்ஸாலி (றஹ்)
  - * இமாம் அப்துல் காதிர் ஜீலானி (றஹ்)
  - * இமாம் ஷாதுலி (றஹ்)

நான்காம் வினாத்தாள்

**4. அக்லாக் - (இஸ்லாமிய ஒழுக்கவியல்)**

4.1 அக்லாக் பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டம்
- * அக்லாக் பற்றிய விளக்கம்
- * ஈமானுக்கும் அக்லாக்குக்கும் இடையிலான தொடர்பு
- * அக்லாக்குக்கும் இபாதத்திற்கும் இடையிலான தொடர்பு
- * உளத்தூய்மை (இஃலாஸ்)

4.2 தக்வா
- * வரஉ, ஸுஹ்த்
- * முராகபா, முஹாஸபா
- * ஷவ்க் (இறையன்பு)

4.3 ஈகை
- * தியாகம்
- * நன்றியுணர்வு
- * பொறுமை - சகிப்புத்தன்மை - விட்டுக் கொடுத்தல் - மன்னித்தல்
- * பணிவு
- * நேரம் பேணுதல்
- * அவையவங்களைப் பேணுதல் நாவு, கண், காது, பாலுறுப்பு
- * பிறரை மதித்தல்
- * நீதியும் நேர்மையும்
- * இளைஞர், யுவதிகளிடம் காணப்பட வேண்டிய சிறப்பான ஒழுக்கப் பண்புகள்
- * ஏனைய சமயத்தவர்களுடன் இணங்கி வாழ்தல்

4.4 இஸ்லாமிய நீதிமுறை

*இணைப்பு - 02*

குறித்த மாவட்டங்களில் பரீட்சை நிலையங்கள் ஏற்படுத்தப்படவுள்ள நகரங்களும் நகர இலக்கங்களும்

| *நகரம்* | *நகர இல.* | *மாவட்ட இல.* | *நகரம்* | *நகர இல.* | *மாவட்ட இல.* |
|---|---|---|---|---|---|
| **கொழும்பு மாவட்டம்** | | 01 | **கம்பஹா மாவட்டம்** | | 02 |
| கொழும்பு (மத்தி) | 01 | | திஹாரிய | 03 | |
| பம்பலப்பிட்டி | 02 | | மாபோலை | 04 | |
| | | | மல்வானை | 05 | |
| | | | நீர்கொழும்பு | 06 | |
| | | | கல்எலிய | 07 | |
| **களுத்துறை மாவட்டம்** | | 03 | **காலி மாவட்டம்** | | 04 |
| பாணந்துறை | 08 | | காலி | 11 | |
| களுத்துறை | 09 | | | | |
| அழுத்கம | 10 | | | | |
| **மாத்தறை மாவட்டம்** | | 05 | **அம்பாந்தோட்டை மாவட்டம்** | | 06 |
| வெலிகமை | 12 | | அம்பாந்தோட்டை | 14 | |
| மாத்தறை | 13 | | | | |
| **கேகாலை மாவட்டம்** | | 07 | **குருநாகல் மாவட்டம்** | | 08 |
| மாவனல்லை | 15 | | குளியாபிட்டி | 18 | |
| வரகாபொலை | 16 | | குருநாகல் | 19 | |
| கன்னத்தோட்டை | 17 | | மெல்சிறிபுர | 20 | |
| | | | பொல்கஹவெல | 21 | |
| | | | கெகுனுகொல்ல | 22 | |
| **புத்தளம் மாவட்டம்** | | 09 | **அநுராதபுர மாவட்டம்** | | 10 |
| நுரைச்சோலை | 23 | | அநுராதபுரம் | 26 | |
| புத்தளம் | 24 | | கெக்கிராவை | 27 | |
| சிலாபம் | 25 | | கலென்பிந்துனுவெவ | 28 | |
| **பொலன்னறுவை மாவட்டம்** | | 11 | **மாத்தளை மாவட்டம்** | | 12 |
| கதுறுவெல | 29 | | மாத்தளை | 30 | |
| **கண்டி மாவட்டம்** | | 13 | **நுவரெலியா மாவட்டம்** | | 14 |
| கண்டி | 31 | | நுவரெலியா | 35 | |
| நாவலப்பிட்டி | 32 | | | | |
| தெல்தொட்டை | 33 | | | | |
| கெலி ஓயா | 34 | | | | |

***இணைப்பு - 02*** *(தொடர்ச்சி)*

| *நகரம்* | *நகர இல.* | *மாவட்ட இல.* | *நகரம்* | *நகர இல.* | *மாவட்ட இல.* |
|---|---|---|---|---|---|
| **இரத்தினபுரி மாவட்டம்** | | *15* | **பதுளை மாவட்டம்** | | *16* |
| எஹலியகொடை | *36* | | பதுளை | *38* | |
| பலாங்கொடை | *37* | | வெலிமடை | *39* | |
| **மொணராகலை மாவட்டம்** | | *17* | **அம்பாறை மாவட்டம்** | | *18* |
| பிபிலை | *40* | | அக்கரைப்பற்று | *41* | |
| | | | பொத்துவில் | *42* | |
| | | | கல்முனை | *43* | |
| | | | சம்மாந்துறை | *44* | |
| | | | இறக்காமம் | *45* | |
| | | | நிந்தவூர் | *46* | |
| | | | ஒலுவில் | *47* | |
| **மட்டக்களப்பு மாவட்டம்** | | *19* | **திருகோணமலை மாவட்டம்** | | *20* |
| காத்தான்குடி | *48* | | மூதூர் | *51* | |
| ஏறாவூர் | *49* | | கிண்ணியா | *52* | |
| வாழைச்சேனை | *50* | | திருகோணமலை | *53* | |
| **வவுனியா மாவட்டம்** | | *21* | **மன்னார் மாவட்டம்** | | *22* |
| வவுனியா | *54* | | மன்னார் | *55* | |
| **முல்லைத்தீவு மாவட்டம்** | | *23* | **கிளிநொச்சி மாவட்டம்** | | *24* |
| முல்லைத்தீவு | *56* | | கிளிநொச்சி | *57* | |
| **யாழ்ப்பாண மாவட்டம்** | | *25* | | | |
| யாழ்ப்பாணம் | *58* | | | | |

*11-759*

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

*1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.*

*2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன்* **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** *அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.*

*3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.*

*4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.*

**5. சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** *தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.*

**6. நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** *பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

**7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

*8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

*9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.*

*10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-*

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

*11.* **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** *வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.*

**12. ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

**13. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

**14. 2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III ஆவது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I ஆவது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III ஆவது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V ஆவது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI ஆவது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவது தொகுதி | 40.00 | 60.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III ஆவது தொகுதி | 15.00 | 60.00 |
| I ஆவது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| III ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V ஆவது பகுதி | 123.00 | 60.00 |
| VI ஆவது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.***– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

### *அட்டவணை - 2019*

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 01.11.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.10.2019 |
| | | வெள்ளி | 08.11.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.10.2019 |
| | | வெள்ளி | 15.11.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.11.2019 |
| | | வெள்ளி | 22.11.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.11.2019 |
| | | வெள்ளி | 29.11.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.11.2019 |
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 06.12.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.11.2019 |
| | | வெள்ளி | 13.12.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.11.2019 |
| | | வெள்ளி | 20.12.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.12.2019 |
| | | வெள்ளி | 27.12.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.12.2019 |

### *அட்டவணை - 2020*

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | வெள்ளி | 03.01.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.12.2019 |
| | | வியாழன் | 09.01.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.12.2019 |
| | | வெள்ளி | 17.01.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.01.2020 |
| | | வெள்ளி | 24.01.2020 | .. | நண்பகல் 12 | வியாழன் | 09.01.2020 |
| | | வெள்ளி | 31.01.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.01.2020 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.